# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



15

நகர் ஊரமைப்புத் துறை

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

ஈரோடு அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.ஆ.மணிமேகலை, பி,இ.,

ந.க.எண்.2423/2020 ஈ.மா–3 நாள்: 01.2021

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் – 2017 – மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி வட்டம் / ஊராட்சி ஒன்றியம் – கஸ்பாபேட்டை ஊராட்சி – கஸ்பாபேட்டை (மொடவண்டிசத்தியமங்கலம்) கிராமம் – ரீ.ச எண்.347/1pt–ல் 0.82 ½ ஏக்கரில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான (In Principle) ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள் 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள் 13.10.2017 மற்றும் அரசு ஆணை எண்.21, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) , நாள் 05.02.2019.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண். 13193/2017/எல்எ2 நாள் 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. அரசாணை (நிலை) எண். 21, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நவ.4(3), நாள். 05.02.2019.
5. அரசாணை (நிலை) எண். 100, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) , நாள் 01.07.2019.
6. மனுதாரர் திரு.நா.தமிழ்வாணன் அவர்களின் விண்ணப்பம் நாள். 21.11.2020
(Ref Online விண்ணப்பம் எண் DTCP/P/0401551/2017 நாள்.24.06.2018)

-------

உத்தரவு:

பார்வை (1) மற்றும் (2)–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (6)–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

.2..

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம் / ஊராட்சி ஒன்றியம், கஸ்பாபேட்டை ஊராட்சி, மொடவண்டிசத்தியமங்கலம் கிராமம், ரி.ச எண்.347/1pt–ல் 0.82 ½ ஏக்கரில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி **ம.வ/ஈ.மா(வரன்முறை) எண்.09/2021** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்த பரப்பு : 0.82 ½ ஏக்கர்

மொத்த மனைகள் : 11 மனைகள்

20.10.2016 முன்பு விற்கப்பட்ட மனை எண்கள் : 4 மனைகள்
(மனை எண்கள் :2, 7, 8N, 8S)

விற்கப்படாத மனைகள் : 7 மனைகள்
(1,3,4,5,5A,6,9)

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 19315.0 சதுர அடி.

ஏற்கனவே உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டவை
நிலையிலுள்ள மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 13750.0 ச.அடி
**(ஆவண எண்.6633/2020 நாள்.13.11.2020)**

தற்போது உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

பூங்கா பரப்பு (மனை எண்.1) : 1957.00 சதுர அடி (10.13%)
(தான ஆவண எண்.8122/2020 நாள்.24.12.2020)

மனைப்பிரிவு சாலை பரப்பு : 3457.00 சதுர அடி
(தான ஆவண எண்.8122/2020 நாள்.24.12.2020)

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்:–**

1) பரிசீலனைக் கட்டணம் :

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | 1 மனைக்கு ரூ.500 வீதம் ஒருமனைக்கு ரூ.500/– மட்டும் செலுத்தப்பட்டுள்ளது. |

மேலும், 1 மனைக்கு ரூ.500 வீதம் 6 மனைகளுக்கு ரூ.3000/– செலுத்தப்பட்டுள்ளது. (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்)பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை செலுத்தப்பட வேண்டும்.

2) வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:

வரன்முறைப்படுத்தும் கட்டணம் உரிய கணக்குத் தலைப்பில் பார்வை 1, 2 மற்றும் 4–ல் கண்டுள்ள அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு வசூலிக்கப்பட வேண்டும்.

அ) வரன்முறைபடுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| 0217- Urban Development – 60 Other Urban Development Schemes – 800 other Receipts – AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots – DTCP 27 Non Taxation Fees – 30 Regularisation. (D.P.C:0217-60-800-AT-2730) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தப்படல் வேண்டும். |

பரிசீலனைக்கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை செலுத்தப்படவேண்டும்.

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.

மேற்காண் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1, 2 மற்றும் 4–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்க்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1) அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 13.10.2017–ல் விதி எண். 7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவைபல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

3) மனையின் ஊடே நீர்வழி பாதை, H.T. Line, L.T.Line and Powr Line ஆகியன செல்லுமாயின் சாலையின் போக்கிற்கு மாற்றிய பின்னரே முறைப்படுத்தப்படல் வேண்டும்.

4) மனைப்பிரிவு எல்லையினுள் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்துகொள்ள வேண்டும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

இணைப்பு :
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

பெறுநர்
தலைவர்,
கஸ்பாபேட்டை ஊராட்சி,
மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்,
மொடக்குறிச்சி வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

நகல்
1) திரு.நா.தமிழ்வாணன்,
த/பெ.நாச்சிமுத்து,
நாதகவுண்டன்பாளையம்,
மொடவண்டி சத்தியமங்கலம் கிராமம்,
ஈரோடு–638 115.

2) சார்பதிவாளர்,
அவல்பூந்துறை சார்பதிவாளர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

3) உதவி இயக்குநர் (நில அளவை),
ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

மொடக்குறிச்சிவட்டாரம் வட்டாரவளர்ச்சிஅலுவலர்(கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி.பெ. சாந்தி

ந.க.எண்: 496/2021/ஆ3 நாள் : .02.2021

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் - மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் - 2017 - ஈரோடு மாவட்டம் - மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் - கஸ்பாபேட்டை ஊராட்சி/கிராமம் -ரீ.சர்வே எண்: 347/1Pt -ல் அமையும் 0.82 ½ ஏக்கர்(35970 ச.அடி) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள-ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு மாவட்டம் அவர்களால் கொள்கை அளவிலான (Inprinciple) ஒப்புதல் வழங்கப்பட்டது- அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கிஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)) துறை நாள்: 04.05.2017, 13.10.2017 மற்றும் 05.02.2019.
2. அரசாணை (நிலை) எண்.172,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)) துறை நாள்:13.10.2017 மற்றும் அரசுஆணை எண்: 21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை (ந.வ.4(3)) நாள்: 05.02.2019
3. அரசாணை (நிலை) எண். 55, வீட்டுவசதிமற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)) துறை நாள்: 02.05.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்: 100. வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்: 01.07.2019
4. ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), அவர்களின் கடிதம் ந.க.எண்: 2423/2020/ஈ.மா. -3 நாள்: 12.12.2020
5. திரு. நா.தமிழ்வாணன், நாதகவுண்டன்பாளையம், ஈரோடு அவர்களின் Online Application No. DTCP/ P/0401551/2017,நாள்: 24.06.2018
6. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), மொடக்குறிச்சி அவர்களின், ந.க.எண்: 496/2021/ஆ3, நாள்: 10.02.2021

*******

ஆணை:-

ஈரோடுமாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், கஸ்பாபேட்டை ஊராட்சி/ கிராமம், ரீ.சர்வே எண்:347/1Pt-ல் அமையும் 0.82½ ஏக்கர் (35970ச.அடி) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை(1),(2) மற்றும் (3)-ல் காணும் அரசாணைகளில் வழங்கப்பட்ட தெளிவுரைகளை பின்பற்றி பார்வை(4)-ல் காணும் உத்தரவுபடி மேற்கண்ட 0.82½ ஏக்கர் (35970ச.அடி) பரப்பளவில் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டுள்ள 11 மனைகளில் 20.10.2016-ற்கு முன்பு விற்பனை செய்யப்பட்ட 4 மனைகள்(மனை எண்:2,7,8N,8S) தவிர்த்து எஞ்சியுள்ள விற்கப்படாத 7 மனைகளில் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்த மனை 1 (மனைஎண்:01)போக மீதமுள்ள 6 மனைகளுக்கு **ம.வ/ஈ.மா.(வரன்முறை) எண்:09/2021** என எண்ணிடப்பட்டு உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்க துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் கொள்கை அளவிலான (Inprinciple) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2. துணை இயக்குநர் (பொ), ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் உத்தரவினைத் தொடர்ந்து கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதலில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் பொருட்டு பார்வை(6)-ல் காணும் கடிதத்தில் உரிய முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிகட்டணம் செலுத்த தெரிவிக்கப்பட்டது.

27

3. பார்வை (6)-ல் காணும் கடிதத்தின் படி மனுதாரர் பின்வருமாறு தொகை செலுத்தியுள்ளார்

1 கூர்ந்தாய்வுக் கட்டணம் ஒருமனைக்கு ரூ.500/- வீதம் 6 மனைகளுக்கு (6x 500=ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) இணையதளம் மூலம் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது

2. வரன்முறைக்கட்டணம் ச.மீ.க்கு ரூபாய் 45/-வீதம்(1615ச.மீ.) உரியஅரசுகணக்கு தலைப்பில் 6 மனைகளுக்கு ரூ.72675/-(ரூபாய் எழுபத்து இரண்டாயிரத்து அறுநூற்று எழுபத்து ஐந்து மட்டும்) ஈரோடு சார்நிலை கருவூலம் சலான் எண். 105, நாள். 08.02.2021-ம் தேதிசெலுத்தப்பட்டுள்ளது.

3. வளர்ச்சிக்கட்டணம் ச.மீ.க்கு ரூபாய் 25/- வீதம் (1615ச.மீ.) 6 மனைகளுக்கு ரூ.40375 /- (ரூபாய் நாற்பது ஆயிரத்து முன்னூற்று எழுபத்து ஐந்து மட்டும்) உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) ஈரோடு மாவட்டம் அவர்கள் பெயரில் உள்ள பாரதமாநில வங்கி ஈரோடு டவுன்கிளை சேமிப்புக்கணக்கு எண்: 37303979395-ல் 08.02.2021-ந் தேதி செலுத்தப்பட்டுள்ளது

4. கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காணும் மனைப்பிரிவுகளில் உள்ள 23 அடி அகலம் கொண்ட ஒரு சாலை மற்றும் 20 அடி அகலம் கொண்ட இரண்டு சாலை (5290ச.அடி) அவல்பூந்துறை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தானசாசன ஆவணஎண்: 6633/2020, நாள்: 13.11.2020-ன்படி கஸ்பாபேட்டை ஊராட்சிக்கு மனுதாரரால் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5. திறந்தவெளி (OSR)/ பூங்கா மனைப்பிரிவு எண்: 01மற்றும் மனைப்பிரிவு 23 அடி அகலம் கொண்ட சாலை (1957+3457=5414) மனுதாரரால் அவல்பூந்துறை சார்பதிவாளர் அலுவலக தானசாசன ஆவணஎண்: 8122/2020, நாள்: 24.12.2020-ன்படி மாவட்ட நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர்(பொ) அவர்கள் பெயருக்கு ஒப்படைப்பு செய்துள்ளார்.

6. கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள 11 மனைகளில் ஏற்கனவே 20.10.2016-ற்கு முன்னர் விற்பனை செய்யப்பட்ட 4 (மனைஎண்:2,7,8N,8S) மனைப்பிரிவுகளின் சொந்தகாரர்களின் மனைகளுக்கு மனுதாரரின் நிலஉரிமை மாற்றம் ஆனதால் மேற்படி மனைப்பிரிவுதாரர்கள் தனித்தனியே விண்ணப்பிக்கும் பட்சத்தில் இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.

7. மொத்தமுள்ள 11 மனைகளில் ஏற்கனவே விற்பனை ஆன 4 மனை மற்றும் திறந்தவெளி இட ஒதுக்கீட்டிற்காக வழங்கப்பட்ட மனைகள் தவிர்த்து விற்பனை செய்யப்படாத மீதமுள்ள மனைஎண்கள்: 3,4,5,5A,6,9 ஆக மொத்தம் 6 (ஆறு மட்டும்) மனைப்பிரிவுகளுக்கும் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து மனைப்பிரிவு வரை படத்திற்கு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. அரசாணை (நிலை) எண். 172,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017-இல் விதிஎண்: 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நிலஉரிமம் குறித்து மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் சான்றுகளின் அடிப்படையில் கொள்கை அளவிலான ஒப்புதலும் வரன்முறை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்/சான்றுகள் சரியானவையல்ல என கண்டறியப்பட்டால் கொள்கை அளவிலான ஒப்புதல் மற்றும் இறுதி வரன்முறை உத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

29

3. பார்வையில் காணும் அரசாணைகளின்படி நிர்ணயிக்கப்பட்டு மனுதாரரால் செலுத்தப்பட்ட கட்டணங்களில் ஏதேனும் குறைவு என பின்னர் கண்டறியப்பட்டால் நிலுவைத் தொகையினை அவர் செலுத்தவேண்டும்.

4. பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின் நிபந்தனைகளில் இம்மனைப்பிரிவு/ மனை மீறப்பட்டிருப்பின் இவ்வுத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

5. வரன்முறை செய்யப்படும் மனையினை குடியிருப்பு பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலைகள் ஏதும் பயன்படுத்திட அனுமதியில்லை.

6. இவ்வரன்முறை தொடர்பாக அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் உத்தரவுகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.

7. ஒவ்வொரு மனைப்பிரிவு பத்திரப்பதிவிற்கும், மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திரபதிவு செய்திடல் வேண்டும்.

8. பத்திரப்பதிவு மற்றும் நிலஉடைமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழுப்பொறுப்பாவார்.

9. திறந்தவெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் குறுக்கே அல்லது நிலத்தின் முன்புறமாக மனுதாரரால் மற்றும் மின்வாரியத்தினரால் விற்பனை செய்யப்படவுள்ள மனை நிலங்களுக்காக உயர்அழுத்த/சாதாரண மின்அழுத்த மின்சாரலைன்கள், மின் டிரான்ஸ்பார்மர்கள் அமைத்து மின்சார வசதிகள் செய்து கொள்ள அனுமதியில்லை.

10. உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் வழியாகமட்டும் ஒரே சீராக மின்கம்பங்கள் அமைத்து மின்சாரவசதி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். Zig-Zagஆக மின்கம்பங்கள் அமைக்கக்கூடாது.

11. இவ்வரன்முறை தொடர்பாக ஊராட்சி தீர்மானம் தனியே பிறப்பிக்கப்படும்.

சிறப்புநிபந்தனை:

1. நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பின் இவ்வுத்தரவு செல்லத்தக்கது அல்ல.

2. உள்ளாட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் பூங்கா இடத்திற்குரிய அசல் தானபத்திரத்தை ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்(பொ), அலுவகத்திலிருந்து பெற்று கஸ்பாபேட்டை ஊராட்சிக்கு ஒப்படைக்க தெரிவிக்கப்படுகிறது.


மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் மனைப்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்திட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: மனை வரைபடம்.

வட்டாரவளர்ச்சி அலுவலர்(கி.ஊ.),
மொடக்குறிச்சி.

பெறுதல்:
திரு. நா.தமிழ்வாணனன்,
த/பெ. நாச்சிமுத்து,
நாதகவுண்டன்பாளையம்,
ஈரோடு.

நகல்:
1. துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), ஈரோடு அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர், சார்பதிவு அலுவலகம், அவல்பூந்துறை.
4. உதவி இயக்குநர் (நிலஅளவை), ஈரோடுமாவட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
5. தலைவர், கஸ்பாபேட்டை ஊராட்சி, மொடக்குறிச்சி வட்டாரம்.
6. ஆ.3பிரிவுஇருப்புக்கோப்பு.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate